| Scale | E | Tempo | 127 | Style | Ballad> 6-8 SlowRock2 |
| --- | --- | --- | --- | --- | --- |

33. அல்பா ஒமேகாவே ஸ்தோத்திரம்

அல்பா ஒமேகாவே ஸ்தோத்திரம்
அப்பா பிதாவே ஸ்தோத்திரம்
அநாதி தேவனே ஸ்தோத்திரம்
அகிலம் படைத்தவரே ஸ்தோத்திரம்

1

அல்லல்கள் தீர்ப்பவரே ஸ்தோத்திரம்
அடைக்கலமானவரே ஸ்தோத்திரம்
அதிசயம் செய்பவர் ஆலோசனை கர்த்தர்
அனுகூல துணையானவர்

2

அற்புதங்களின் தேவன் ஸ்தோத்திரம்
ஆறுதலின் தேவனே ஸ்தோத்திரம்
ஆராய்ந்தறிபவர் ஆத்தும நங்கூரம்
அரணான கோட்டையானவர்

3

இம்மட்டும் காத்தீரே ஸ்தோத்திரம்
இம்மானுவேலரே ஸ்தோத்திரம்
இக்கட்டை களைந்தீரே இன்னல்கள் நீக்கினீர்
இரட்சண்ய கொம்புமானவர்

4

இரட்சிப்பின் பெலனே ஸ்தோத்திரம்
இயேசு கிறிஸ்துவே ஸ்தோத்திரம்
இரத்தம் சிந்தினீர் இரட்சிப்பை தந்தீர்
இரட்சகரே ஸ்தோத்திரம்